# இயற்கைவழி வேளாண்மையில் கிராமப்புற இளைஞர்களின் திறன் வளர்க்கும் திட்டம் – பங்கேற்பதற்கான அழைப்பு

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் வணக்கங்கள். எங்கள் மையம் நிலைத்த வேளாண்மையை பரவச் செய்யும் நோக்கத்தோடு கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகள் மத்தியில் பணி செய்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக மக்கள் மத்தியில் இயற்கைவழி வேளாண்மை குறித்து ஆர்வம் அதிகரித்திருப்பது நிரூபணமாகியுள்ளது. மேலும் என்றும் இல்லாத அளவிற்கு நுகர்வோர் மத்தியில் இயற்கை உணவின் தேவையும் அதிகரித்துள்ளது. சிறு குறு விவசாயிகள், பெரு விவசாயிகள், விளைபொருட்களை ஏற்றுமதி செய்வதில் ஆர்வமுள்ள விவசாயிகள், விவசாயிகளுக்கு வேளாண்மை தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துதல் மற்றும் கிராமப்புற வாழ்வாதாரத்தை உருவாக்குவதற்கு உதவி புரியும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள், சுற்றுச்சூழல் மற்றும் மனித ஆரோக்கியத்தில் பணிபுரியும் மையங்கள் போன்ற பலரும் இன்று இயற்கைவழி வேளாண்மையை பின்பற்றி வருகின்றனர். எனினும் இந்த முயற்சிக்குத் தேவையான, இயற்கைவழி வேளாண்மையை குறித்து திறம் பெற்ற பயிற்றுனர்கள் இல்லை என்பது முக்கிய குறைபாடுகளில் ஒன்று. பல்வேறு வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் உள்ள பாடத்திட்டங்கள் ரசாயன வேளாண்மையை மட்டுமே மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் தற்போது அந்தப் பாடத்திட்டங்களில் இயற்கைவழி வேளாண்மையை அறிமுகப்படுத்துவதற்கான தேவையை உணர்ந்துள்ளனர்.

**திட்டச் சுருக்கம்**

இந்தச் சூழ்நிலையில் இயற்கைவழி வேளாண்மையில் கிராமப்புற இளைஞர்களின் திறன் வளர்க்கும் திட்டம் ஒன்றைத் துவங்குவதற்கு எங்கள் மையம் முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- 18 – 30 வயதிற்கு உட்பட்ட, +2 வரை படித்த கிராமப்புற இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- விண்ணப்பதாரர்கள் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவராகவோ, விவசாயத்தில் ஈடுபடுபவராகவோ விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த செயல்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடும் எண்ணம் உடையவராகவோ இருக்க வேண்டும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர் தன்னுடைய சொந்த நிலத்திலோ அல்லது கிராமங்களிலோ இயற்கைவழி வேளாண்மையை பரப்புபவராக இருக்க வேண்டும் அல்லது இயற்கைவழி வேளாண்மையில் ஈடுபடுவதற்கு உதவி புரியும் நிறுவனங்களில் உள்ள திட்டங்களில் பணி புரிபவராகவோ, பணி புரிய ஆர்வம் உள்ளவராகவோ இருக்க வேண்டும்.
- இந்தப் பயிற்சி தமிழில் அளிக்கப்படும். இதில் வகுப்பறை பயிற்சிகள் மற்றும் வயல்வெளி பயிற்சிகள் ஆகிய இரண்டும் இடம் பெறும். பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் CIKS-ன் பல்வேறு களப்பணிகளில் பங்கு பெற்று நேரிடை பயிற்சி பெறுவர்.
- ஒரு வருட காலப் பயிற்சியில் ஈடுபடும் இளைஞர்களுக்கு மாதம் ரூ. 5,000/– உதவித் தொகை வழங்கப்படும்.

- இந்தத் திட்டத்தில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து நன்கு தமிழ் தெரிந்த இளைஞர்களை தேர்ந்தெடுக்க முடிவு செய்துள்ளோம்.

**உதவித் தொகை**

தொண்டு நிறுவனங்களோ, தனிநபர்களோ இளைஞர்களை இந்தப் பயிற்சிக்காக ஊக்க ஆதரவு (Sponsorship) அளிக்க விரும்பினால் ரூ. 1,00,000/- அளிக்க முன்வர வேண்டும். பகுதி ஊக்க ஆதரவு கொடுக்கவும் முன்வரலாம். இந்தத் திட்டத்திற்கு தகுதியுடைய இளைஞர்களைத் தேர்ந்தெடுக்கவும், அவர்களின் பயிற்சிக்கு ஊக்க ஆதரவு அளிக்கும் நிறுவனங்களைக் கண்டறியவும் முயற்சிகள் எடுத்து வருகிறோம். இவ்வாறு ஊக்க ஆதரவு அளிக்கும் நிறுவனங்களின் மூலம் பயிற்சி பெறுவதோடு மட்டுமில்லாமல் அந்த நிறுவனங்களிலேயே உள்ள திட்டங்களில் பணிபுரியும் வாய்ப்பும் இந்த இளைஞர்களுக்கு ஏற்படுகிறது.

- ஊக்க ஆதரவு அளிக்கும் நிறுவனம் முழு ஊக்க ஆதரவு அளிக்க முடியாமல் இருக்கும் பட்சத்தில் பகுதி ஊக்க ஆதரவையும் அளிக்கலாம். இந்த நிறுவனங்கள் திறமையுள்ள இளைஞர்களை தேர்வு செய்து, அனுப்ப வேண்டும்.
- எந்த விதமான ஊக்க ஆதரவும் அளிக்க முடியாத பட்சத்தில் ஊக்க ஆதரவிற்காக விண்ணப்பிக்கலாம். திறமை மற்றும் தகுதியின் அடிப்படையில் முழு அல்லது பகுதி ஊக்க ஆதரவு பெறுவதற்கும் வாய்ப்பு உண்டு.
- பயிற்சிக்கான தேர்வு ஒரு தேர்வு குழுமம் மூலம் செய்யப்படும், முழு ஊக்க ஆதரவு பெற்றிருப்பதை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எந்த விண்ணப்பதாரின் பங்கேற்பையும் உறுதி செய்ய இயலாது. தேர்வு குழுமத்தின் முடிவே இறுதியானது.

**கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள்**

1. இந்தத் திட்டத்தில் உள்ள இளைஞருக்கு உதவித் தொகை வழங்க விருப்பம் இருந்தால் இந்த இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்புங்கள்.
2. இந்தத் திட்டத்தில் ஆர்வமுள்ள மற்ற மையங்கள் மற்றும் நிறுவனங்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம். இந்தக் கடிதத்தை ஆர்வமிக்கவர்களுக்கும் அனுப்புங்கள்.
3. இந்தத் திட்டத்தை உருவாக்குவதற்கான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் வரவேற்கப் படுகின்றன.

**முக்கியத் தேதிகள்**

- இயற்கைவழி வேளாண்மையில் இளைஞர்களின் திறன் வளர்க்கும் திட்டத்தின் விண்ணப்பத்தை அனுப்புவதற்கான கடைசி நாள் - 15 ஜூலை 2011.
- தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களின் பட்டியலை உறுதிப்படுத்தும் நாள் - 30 ஜூலை 2011.
- பயிற்சித் திட்டம் துவக்கப்படும் நாள் - 15 ஆகஸ்ட் 2011.

## ஊக்க ஆதரவிற்கான விண்ணப்பம் –
## இளைஞர்களுக்கான இயற்கைவழி வேளாண்மை பயிற்சித் திட்டம்

| எண். | விபரம் | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | |
| 2. | முகவரி | |
| 3. | தொலைபேசி எண், மின்னஞ்சல் | |
| 4. | கல்வித் தகுதி | |
| 5. | பணி அனுபவங்கள் (ஏதேனும் இருந்தால்) | |
| 6. | விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவரா? | |
| 7. | ஊக்க ஆதரவு **(Sponsorship)** அளிக்கும் முகமையின் பெயர் | |
| 8. | ஊக்க ஆதரவு அளிக்கும் முகமையில் உள்ள பொறுப்பாளரின் பெயர் | |
| 9. | தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் இந்தத் திட்டத்திற்கு தகுதியானவர்கள் என்பதற்கு ஊக்க ஆதரவு அளிக்கும் முகமையின் சில கருத்துக்கள் | |
| 10. | இந்தப் பயிற்சி முடிவடைந்த பின்னர் ஊக்க ஆதரவு அளிக்கப்பட்ட இளைஞருக்கான எதிர்காலத் திட்டம் என்ன? | |
| 11. | மொத்த ஊக்க ஆதரவு தொகையான ரூபாய் ஒரு லட்சத்தையும் உங்களால் வழங்க இயலுமா? இயலாது என்றால் எவ்வளவு தொகை உங்களால் வழங்க முடியும் என்பதை குறிப்பிடுக. | |

ஊக்க ஆதரவு அளிக்கும் முகமை பொறுப்பாளரின் கையொப்பம் :

தேதி :

**குறிப்பு :**

ஊக்க ஆதரவு கிடைக்காமல் நேரடியாக விண்ணப்பிக்கும் இளைஞர்கள் இணைப்பில் உள்ள படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள 1 முதல் 6 எண் வரையில் உள்ள விவரங்களை பூர்த்தி செய்ய வேண்டும். மேலும் இந்தப் பயிற்சிக்கு நீங்கள் தகுதியானவர் என்பதற்கான காரணங்கள் மற்றும் பயிற்சிக்குப் பின்னர் உங்களின் திட்டம் பற்றியும் 1 – 2 பக்கங்களில் எழுதி இந்தப் படிவத்துடன் அனுப்ப வேண்டும்.